OS 210/2019

பி.வா.சா.2 தமிழ்ச்செல்வி க/பெ சின்னகண்ணு

நாள் 10.06.2026

**குறுக்கு விசாரணை**

1. நான் தாக்கல் செய்துள்ள ஆதார் அட்டையில் எந்த வருடம் பிறந்ததாக தேதி சொல்லப்பட்டுள்ளது என்றால் ஆதார் அட்டையை பார்த்தால் தான் சொல்ல முடியும். தற்போது என்ன வயது என்றால் 65 வயதாகும். என்னுடன் பிறந்தவர்களில் மூத்தவர் யார் என்றால் எனது அக்கா தஞ்சியம்மாள் ஆவார். எனது அக்கா தஞ்சியம்மாளுக்கு தற்போது என்ன வயது என்றால் என்னை விட 10 வயது அதிகமாக இருக்கும். எனது பெரிய மகனின் வயது என்ன என்றால் 34 ஆகும். எனக்கு எப்போது திருமணம் ஆனது என்றால் 1991ல் திருமணம் ஆனது. எனது அக்காவிற்கு எப்போது திருமணம் நடந்தது என்றால் எனது அக்காவிற்கு திருமணம் நடந்து 4 அல்லது 5 வருடத்திற்கு பின்பு எனக்கு திருமணம் நடந்தது. எங்கள் இருவருக்கும் திருமண பத்திரிக்கை போட்டார்களா என்றால் போட்டார்கள். அந்த திருமண பத்திரிக்கையை பார்த்தால் எனக்கு எப்போது திருமணம் நடந்தது எனது அக்காவிற்கு எப்போது திருமணம் நடந்தது என்று தெரியவரும் என்றால் ஆமாம். எனக்கும் சரி எனது அக்காவிற்கும் சரி 1989க்கு முன்பே திருமணம் நடந்து விட்டது என்றால் சரிதான்.

2. வாதிக்கு படிப்பறிவு இல்லை என்றால் ஆமாம். 1ம் பிரதிவாதி இராமலிங்கம் சொத்து வாங்கிய விவரம் தெரியுமா என்றால் தெரியும். எந்த வருடம் வாங்கினார் என்றால் 1999ல் வாங்கினார். அப்போது எனது தகப்பனார் உயிருடன் இருந்தார் என்றால் சரிதான். வாதி எழுத படிக்க தெரியாது என்பதால் எனது அப்பா 1ம் பிரதிவாதி பெயரில் சொத்து வாங்கி கொடுத்தார் என்றால் இல்லை. எனது அப்பா, அம்மா அவரது மகன்கள் ஒன்றாக இருந்தார்களா என்றால் வாதி தனியாக இருந்தார், 1ம் பிரதிவாதி மற்றும் அவருடன் அப்பா, அம்மா இருந்தார்கள். அப்பா, அம்மாவிற்கு யார் சோறு போட்டது என்றால் தம்பி தான் சோறு போட்டார். நிலத்தை அப்பா, அம்மா பயிறு வைத்தார்கள் என்றால் ஆமாம். எனது பெரிய தாத்தா மகன் இராமசாமி என்பவரிடம் இருந்து 1ம் பிரதிவாதி இராமலிங்கம் சொத்து வாங்கினார் என்றால் சரிதான். எனது அப்பா தான் சொத்து வாங்கி கொடுத்தார் என்றால் இல்லை இராமலிங்கம் தான் வாங்கினார். 1ம் பிரதிவாதி இராமலிங்கம் கேரளாவில் இருந்த போது சொத்தை யார் பார்த்தார் என்றால் அப்பா, அம்மா பார்த்தார்கள்.

3. கேரளாவில் ஏர்போர்சில் வேலை செய்தார். 1ம் பிரதிவாதி கேரளாவில் வேலை செய்ததை நான் போய் பார்த்தேனா என்றால் இல்லை. 1ம் பிரதிவாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சொத்தை எனது அப்பா 1ம் பிரதிவாதிக்கு வாங்கி கொடுத்தார் என்றால் இல்லை. 1989க்கு முன்னரே எனக்கும் அக்காவிற்கும் திருமணம் ஆகிவிட்டது என்றால் எனக்கு சொத்தில் பாகம் இல்லை என்றாலும் சரியல்ல. 1ம் பிரதிவாதி தனது தனிப்பட்ட வருமானத்தில் சொத்து வாங்கவில்லை என்றால் சரியல்ல.